**அரசின் நிதிக்கூற்றுக்கள் - 2020**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான அரசின் நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, தேறிய சொத்துக்களிலான/ மூலதனத்திலான மாற்றங்கள் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2020 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அரசின் நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 15 ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய பாராளுமன்றத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புரைகள் உள்ளடக்கப்பட்ட பொழிப்பு அறிக்கை 2021 நவம்பர் 15 ஆந் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வெளியிடப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10 உப பிரிவின் பிரகாரம் அந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியினால் ஏற்படும் தாக்கங்களை தவிர்த்து, இதனுடன் சமர்ப்பிக்கப்படும் அரசின் நிதிக்கூற்றுக்களில் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான அரசின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் என்பவற்றை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் இந்த அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 விடயங்களை சுட்டிக் காண்பித்தல்

நிதிக்கூற்றுக்களின் குறிப்பு இலக்கம் 11(a)- வெளிநாட்டுக் கடன் பெறுவனவுகள் - 2020 தொடர்பில் கவனம் செலுத்தப்படுவதுடன், அதன் மூலம் 2019 ஆம் ஆண்டு அல்லது அதற்கு முன்னைய வருடங்களில் பெற்றுக்கொள்ளப்பட்ட எனினும், கணக்கு வைக்கப்பட்டிராத ரூபா 209.98 பில்லியனான வெளிநாட்டுக் கடன்கள் பாராளுமன்றத்தில் நிதி ஒதுக்கீட்டினை அங்கீகரித்து 2020 ஆம் ஆண்டினுள் கணக்கு வைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

2020 இன் 6 ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 2(1)(ஆ) பிரிவின் பிரகாரம், 2020 நிதியாண்டினுள் பெற்றுக்கொள்ளப்படும் கடன் தொகைகளிலிருந்து உருவாகும் எஞ்சிய மீதி

2020 ஆம் ஆண்டினுள் எந்த சந்தர்ப்பத்திலும் ஆண்டின் இறுதியில் ரூபா 2,830 பில்லியனை விஞ்சலாகாது என குறிப்பிடப்பட்டிருந்த காரணத்தால், இந்த கடந்த வருடங்களில் பெற்றுக்கொள்ளப்பட்ட எனினும், 2020 ஆம் ஆண்டின் போது கணக்கு வைக்கப்பட்டுள்ள ரூபா 209.98 பில்லியனான கடன் 2020 ஆம் ஆண்டின் கடன் எல்லையினை கணிப்பீடு செய்தல் தொடர்பில் கவனத்திற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

இந்த விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முறைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

### 1.4 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பு

இந்த நிதிக்கூற்றுக்களை பொதுவான ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 ஆம் பிரிவில் குறிப்பிடப்படடுள்ள ஏற்பாடுகளுக்கமைய தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றினை தீர்மானித்தல் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாக உள்ளது. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் அமைச்சினால் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகரச்சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் அமைச்சின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளக கட்டுப்பாட்டு முறைமையினை தயாரித்து பேணிச் செல்லப்படுவதாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் சான்றுபடுத்த வேண்டியதுடன், அந்த கட்டமைப்பின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பில் முன்னர் மேற்கொள்ளப்பட்ட மீளாய்வொன்றினை மேற்கொண்டு, அதற்கமைய கட்டமைப்பினை ஆக்கபூர்வமானதாக நடாத்திச் செல்வதற்கு தேவையான மாற்றங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

### 1.5 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

என்னால் துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது

சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளகக் கட்டுப்பாடு தொடர்பாக அறிந்து கொள்வதற்காகவன்றி, உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிப்பதற்கு அல்ல.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாக கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்களை பொருத்தமான மற்றும் நியாயமான முறையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளமையை மதிப்பாய்வு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களை சமர்ப்பிக்கும் போது நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்புகள் மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாக கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமானதாகவும் நியாயமாகவும் உள்ளடங்கியுள்ளதாக,

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புகள், உள்ளக கட்டுப்பாட்டிலான முக்கியமான குறைபாடுகள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பில் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டது.

## 1.6 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவு மற்றும் 38 ஆம் பிரிவின் பிரகாரம் பின்வரும் பின்வரும் விடயங்களை நான் வெளிப்படுத்துகின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்கியுள்ளதாக,

(ஆ) இந்த அறிக்கையின் 1.6.2.1(அ)(i)(ii)(iii) மற்றும் (ஆ), 1.6.2.3, 1.6.2.4 (ஆ), 1.6.2.6, 1.6.2.7 மற்றும் 1.6.2.8 (இ) பந்தியில் உள்ளடக்கப்பட்டுள்ள கடந்த வருடத்தில் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் எனது அறிக்கையில் சுட்டிக்காண்பிக்கப்பட்டுள்ள கணக்காய்வு அவதானிப்புகளை சீராக்குவதற்கு அல்லது அவற்றுக்கு இணங்கியொழுகுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 1.6 நிதிக்கூற்றுகள் தொடர்பான கருத்துரைகள்

### 1.6.1 கணக்கீட்டு கொள்கைகள்

கணக்கீட்டு கொள்கைகளுக்கு இணங்காமைகள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளன.

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | அரச நிதிக் கூற்றுக்களில் ரூபா 731,732 மில்லியன் கூட்டுத்தொகையான நிதியல்லாத சொத்துக்கள் காண்பிக்கப்பட்டிருந்தது. அந்த சொத்துக்களின் பெறுமானத்தேய்விடம் கூடிய பெறுமதி அதன் பயன்படு ஆயுட்காலம் முழுவதற்கும் கிரமமான முறையில் ஒதுக்கீடு செய்து குறைந்து செல்லும் கணக்கீட்டு எண்ணக்கருவின் அடிப்படையில் பெறுமானத்தேய்வு ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிருக்க வில்லை. அதன் பிரகாரம் இந்த சொத்துக்களின் திரண்ட பெறுமானத்தேய்வு மற்றும் திரண்ட அழிவு நட்டம் ஏதேனும் காணப்படின் அதனை கழித்த பின்னர் கிடைக்கும் கொண்டு செல்லும் பெறுமதி நியாயமான முறையில் காண்பிக்கப்படவில்லை. | அரசாங்கத்திற்கு சொந்தமான அனைத்து நிதியல்லாத சொத்துக்களையும் இனங்கண்டு கணக்கு வைப்பதற்கு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுவதுடன் உத்தேசிக்கப்பட்ட கணக்கீட்டுச் சட்டகம் மற்றும் நியமம் அறிமுகப்படுத்தப்பட்டதன் பின்னர் பொருத்தமான பெறுமானத்தேய்விடல் கொள்ளையொன்றை அறிமுகப்படுத்த எதிர்பார்க்கப்பட்டுள்ளது. | அடிப்படை கணக்கீட்டு எண்ணக்கருக்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட வேண்டியமை. |
| (ஆ) | மீளாய்வாண்டின் போது ரூபா 811,773 மில்லியன் முதலீடுகளாக நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்த போதிலும் நிதியல்லாத சொத்துக்களாக காண்பிக்கப்பட்டிருந்தது ரூபா 42,864 மில்லியன் மாத்திரம் ஆகும். நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்த முதலீட்டு செலவினத்தில் ரூபா 768,909 நிதியல்லாத | அரச முதலீட்டு செலவினத்தினுள் மூலதன சொத்துக்களின் புனரமைப்பு மற்றும் மேம்படுத்தல்கள், இயலுமை அபிவிருத்தி மற்றும் ஏனைய மூலதன செலவினங்கள் உள்ளடக்கப்பட வேண்டிய போதிலும் மூலதன சொத்துக்களை கைப்பற்றுவதன் கீழான செலவினங்கள் மாத்திரம் நிதியல்லாத சொத்துக்களின் | சொத்துக்களை கொள்வனவு செய்வதன் அடிப்படையிலான செலவினங்கள் மாத்திரம் மூலதன செலவினங்களாக அறிக்கையிடப்பட வேண்டியமை. |

| | | | |
|---|---|---|---|
| | சொத்துக்களாக கணக்கு வைக்கப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே நிதிக்கூற்றுக்களின் குறிப்பு இலக்கம் 10 இன் பிரகாரம் முதலீட்டு சொத்துக்களினை சுவீகரிப்பதற்காக ரூபா 141,843 மில்லியன் காண்பிக்கப்பட்டிருந்த போதிலும் குறிப்பு இலக்கம் 16 இல் ஆண்டினுள் இடம்பெற்ற கொள்வனவுகள் ரூபா 42,864 மாத்திரம் காண்பிக்கப்பட்டிருந்தது. | கீழ் மூலதனமாக்கப்பட்டுள்ளது. | |
| (இ) | கடந்த வருடத்தினுள் நிதி நிலைமைக் கூற்றில் அரச கடனாக வகைப்படுத்தப்படாத இலங்கை மத்திய வங்கி முற்பணங்கள் மீளாய்வாண்டின் போதும் அரச கடனாக வகைப்படுத்தப்பட்டிருந்தது. அது திரண்ட நிதியத்தின் ஊடாக ஏனைய கடன் பெறுவனவுகளை கணக்கு வைக்கும் நடைமுறைக்கு முரணாக கணக்கு வைக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் திரண்ட நிதியத்தில் ரூபா 153,079 மில்லியன் பெறுமதி குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது. | பதில் வழங்கப்பட்டிருக்கவில்லை. | சரியான மற்றும் தொடர்ச்சியான தகவல்களின் அடிப்படையில் நிதிக் கூற்றுக்களை வெளிப்படுத்த வேண்டும். |
| (ஈ) | அரச நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்ட காசுப் பாய்ச்சலை தயாரிக்கும் அடிப்படை வெளிப்படுத்தப்பட்டிராததுடன் காசு உட்பாய்ச்சலொன்று அல்லது வெளிப்பாய்ச்சலாக நேரடியாக சமர்ப்பிக்காது ஏனைய பொறுப்புக்கள் வைப்புக் கணக்குகளின் மாற்றங்களாக ரூபா 12,856 மில்லியன் நிதிச் செயற்பாடுகளின் கீழ் காண்பிக்கப்பட்டிருந்தது. | எதிர்காலத்தில் உரிய மாதிரிக்கமைவாக வேறுபாடுகளை மேற்கொள்வதற்கு குறித்து வைத்துக் கொள்கின்றேன். | சரியான தகவல்களின் அடிப்படையில் நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்படல் வேண்டும். |

**1.6.2 கணக்கீட்டு குறைபாடுகள்**

**1.6.2.1 அரச படுகடன்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அரசினால் செலுத்த பொதுப் படுகடன் மீதி ரூபா 14,845,571 மில்லியன் ஆக இருந்தது. தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளில் ரூபா 701,726 மில்லியனான கடன் கணக்கு வைக்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. விபரங்கள் பின்வருமாறு. | | |
| (i) துறைமுகங்கள் மற்றும் கப்பல்துறை அமைச்சினால் சமர்ப்பிக்கப்பட்ட MPS/SEC/2017/32 ஆம் இலக்க மற்றும் 2017 யூலை 20 ஆந் திகதிய "அம்பாந்தோட்டை துறைமுக சலுகை ஒப்பந்தம்" என்ற பெயரிலான அமைச்சரவை விஞ்ஞாபனத்திற்கு 2017 ஆகஸ்ட் மாதம் 04 ஆந் திகதி அமைச்சரவை அங்கீகாரம் கிடைத்திருந்ததுடன், அதன் அடிப்படையில் அம்பாந்தோட்டை துறைமுக நிர்மாணத்திற்காக அரசினால் பெற்றுக்கொள்ளப்பட்ட கடன்களிலிருந்து தொடர்ந்தும் செலுத்த வேண்டிய மீதிகளை மீள செலுத்தும் பொறுப்பு அக்கடன் உடன்படிக்கை | ஹம்பாந்தோட்டை துறைமுகத்தின் நிர்மாணத்திற்காக பெற்றுக்கொள்ளப்பட்ட கடன் தொகை 2017ஆம் ஆண்டு வரையிலும் இலங்கை துறைமுக அதிகாரசபையினால் செலுத்தப்படுவதுடன், 2017 ஆகஸ்ட் மாதம் 04 ஆந் திகதிய அமைச்சரவைத் தீர்மானத்தின் பிரகாரம், கடன் சேவைப்படுத்தல் திறைசேரியினால் மேற்கொள்ளப்படும். ஹம்பாந்தோட்டை துறைமுகம் இலங்கை துறைமுக அதிகாரசபையின் சொத்தொன்றானமையால் அதனை அதிகாரசபையின் புத்தகங்களில் உள்ளடக்குமாறு தலைவருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. | அரசின் நிதிக்கூற்றுக்களில் அரச படுகடன் மீதிகள் சரியாக கணக்கு வைக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | அமுலாகும் திகதி முதல் அமுலாகும் வகையில் பொது திறைசேரியினால் பொறுப்பேற்கப் பட்டிருந்தது. அதன் பிரகாரம் 2020 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியாக அவ்வாறு செலுத்தப்பட வேண்டிய ரூபா 164,602 அக்கடன் மீதி குடியரசின் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டிருக்க வில்லை. அவ்வாறே அக்கடன் மீதி துறைமுக அதிகாரசபையின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிதிக் கூற்றுக்களிலிருந்தும் நீக்கப்பட்டிருந்தது. | | |
| (ii) | அரசின் நிதிக்கூற்றுக்களின் நிதிச் செயலாற்றல் கூற்றின் பிரகாரம் 2020 ஆம் ஆண்டினுள் வெளிநாட்டுக் கடன் மீள் கொடுப்பனவு பெறுமதி ரூபா 504,209 மில்லியன் ஆக இருந்தது. நிதிக்கூற்றுக்களின் குறிப்பு 28 (வெளிநாட்டுக் கடன் மீதிகள் கூற்று) இன் பிரகாரம் 2020 ஆம் ஆண்டில் வெளிநாட்டுக் கடன் கொடுப்பனவு பெறுமதி ரூபா 489,057 மில்லியன் என காண்பிக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் வெளிநாட்டுக் கடன் மீள் கொடுப்பனவுகளின் வேறுபாடு ஹம்பாந்தோட்டை துறைமுக நிர்மாணிப்பதற்காக அரசாங்கத்தினால் செலுத்தப்படும் ரூபா 15,152 மில்லியன் 28 கடன் தவணைகளில் உள்ளடக்கப் பட்டிருக்கவில்லை. | அந்த வேறுபாடு இலங்கை துறைமுக அதிகாரசபையின் கீழ் கணக்கு வைக்கப்பட்டுள்ள ரூபா 15,152.44 மில்லியனான கடன் மீதிகளுக்குரிய உரிய கடன் வழங்கிய நிறுவனங்களுக்கு 2020 ஆம் ஆண்டின் போது மேற்கொள்ளப்பட்ட கடன் மீளளிப்பு ஆகும். | அரசின் நிதிக்கூற்றுக்களில் அரச கடன் செலுத்தல்கள் சரியாக கணக்கு வைக்கப்பட வேண்டும |

| | | | |
|---|---|---|---|
| (iii) | 2020 ஆம் ஆண்டினுள் தீர்வையாகிய 19 வெளிநாட்டுக் கடன் உடன்படிக்கைகளுக்குரிய 2019 அல்லது அதற்கு முன்னர் தீர்வையாகிய 05 வெளிநாட்டுக் கடன் உடன்படிக்கைகளுக்குரிய ரூபா 6,124 மில்லியன் கூட்டுத்தொகை 2020 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் வெளிநாட்டுக் கடனாக கணக்கு வைக்கப்பட்டிருக்கவில்லை. | குறித்த அமைச்சிற்கு சொந்தமான 2020 ஆம் ஆண்டின் போது போதியளவான வரவு செலவுத் திட்ட ஒதுக்கீடு இல்லாதிருந்தமை மற்றும் குறித்த செயற்திட்டத்தினால் 2020 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியான செலவினங்கள் சான்றுப்படுத்தப்படாமை ஆகிய காரணங்களினால் இந்தக் கடன் கணக்கு வைக்கப்பட்டிருக்கவில்லை. | உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுக் கடனை உரிய முறையில் கணக்கு வைக்க வேண்டியமை. |
| (iv) | வெளிநாட்டு வழங்கல் திணைக்களத்தின் CS-DRMS 2000+Report 854-1 அறிக்கை மற்றும் அரச நிதிக்கூற்றுக்கள் ஆகியவற்றுக்கிடையே 04 வெளிநாட்டு கடன் உடன்படிக்கைகளுக்கு உரிய ரூபா 5,736 மில்லியன் கடன் மீதிகளின் வேறுபாடொன்று நிலவியது. | ஒரு செயற்திட்டத்தின் கடன் வழங்குனரின் தாமதத்தின் காரணமாக 2019.10.31 ஆந் திகதிக்குரிய கடன் மற்றும் வட்டிப்பணம் 2020.04.01 ஆந் திகதி கொடுப்பனவு செய்யப்பட்டுள்ள போதிலும் வெளிநாட்டு வழங்கல் திணைக்களத்தின் CS-DRMS கட்டமைப்பின் அது குறித்த தினத்தில் பதிவு செய்யப்பட்ட காரணத்தினால் அந்த வேறுபாடு உருவாகியுள்ளது. அரச கடன் தொடர்பில் அனைத்து அறிக்கைகளிலும் உள்ளடக்கப்பட்டுள்ள பெறுமதிகளை ஒப்பிட்டு சரியான பெறுமதிகளை நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்க வேண்டியமை. | |
| (ஆ) | 2020 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியான திறைசேரி பிணை முறிகளுக்கு உரிய மொத்த ஆகக் குறைந்த விலை ரூபா 291,166 மில்லியன் 2020 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியாக நிதியேற்பாட்டினை பெற்றுக் கொள்ளாது கணக்கு வைக்கப்பட்டிருந்தது. இந்த ஆகக்குறைந்த பெறுமதி | 2016 ஆம் ஆண்டிற்கு முன்னர் வெளியிடப்பட்ட திறைசேரி பிணை முறிகளுக்கு உரிய ஆகக்குறைந்த விலையினை தீர்ப்பனவு செய்யும் ஆரம்ப நடைமுறையாக இந்த பெறுமதி கணக்கு வைக்கப்பட்டது. இந்த பிணை முறி 2045 ஆம் ஆண்டு வரையான காலம் நீடிக்க உள்ளமையால் | உரிய புதிய கொள்கைக்கு இணங்க கணக்கு வைத்து நாளதுவரையாக்க வேண்டியமை. |

| | | | |
|---|---|---|---|
| | குறித்த திறைசேரி பிணை முறிகள் முதிர்வடையும் வருடத்தில் நிதிச் செயலாற்றல் கூற்றில் சீராக்கம் செய்வதற்கு நடவடிக்கை எடுப்பதாக குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் தற்போது பயன்படுத்தப்படும் கணக்கீட்டுக் கொள்கையான திறைசேரி பிணை முறிகளின் ஆகக்குறைந்த விலையினை அவை வெளியிடப்படும் ஆண்டின் நிதி செயலாற்றல் கூற்றில் உள்ளடக்கும் கொள்கைக்கு இணங்கியிருக்கவில்லை. | ஒவ்வொரு வருடத்திலும் அதிகரிக்கும் தொகையை பாதீட்டு மதிப்பீட்டிற்கு உள்ளடக்கப்படும். | |
| (இ) | 2020 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியான அரச நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கப்படும் வெளிநாட்டு கடன் மீதி அத்திகதியில் நிலவிய அந்நிய செலாவணி வீதங்களுக்கு (Closing Rate) மாற்றும் போது ரூபா 282,565 மில்லியன் அந்நிய செலாவணி மாற்று நட்டமொன்று ஏற்பட்டிருந்தது. அந்த நட்டம் நிதிச் செயலாற்றல் கூற்றுக்கு சீராக்கம் செய்யப்பட வேண்டிய போதிலும் அவ்வாறு அல்லாது தேறிய சொத்துக்கள் சீராக்கல் கணக்கிற்கு (Net Asset Adjustment Account) சீராக்கப்பட்டிருந்தது. | அட்டுறு அடிப்படையில் கணக்குகளை தயாரித்தல் இடம்பெறுகின்றமையால் குறித்த நட்டத்தை நிதிச் செயலாற்றலுக்கு சீராக்கம் செய்யப்படுவதில்லை. | சரியான கணக்கீட்டு கொள்கைகளின் அடிப்படையில் நிதிக் கூற்றுக்களை தயாரிக்க வேண்டியமை. |
| (ஈ) | மீளாய்வாண்டின் போது அரச நிதிக் கூற்றுக்களுடன் சமர்ப்பிக்கப்பட்டிருந்த குறிப்பு இலக்கம் 28(II) இல் உள்ளடக்கப்பட்ட 2020 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியான வெளிநாட்டு பயன்பாட்டு பணத்தில் காண்பிக்கப்பட்டுள்ள கடன் | இந்த வேறுபாடுகளுக்கான காரணமாக கிட்டிய அந்நிய செலாவணி பெறுமதிக்கு மாற்றம் செய்தமையால் ஏற்பட்டுள்ள வேறுபாடுகள் கடனுக்கான உச்ச தீர்வை கடன் தொகைகளில் ஈடுசெய்தல், உடன்படிக்கையின் பிரகாரம் | நிதிக் கூற்றுக்கள் மற்றும் அதனுடன் தொடர்புடைய குறிப்புக்களில் உள்ளடக்கப் பட்டுள்ள பெறுமதிகள் சரியானதாக இருக்க |

| | | |
|---|---|---|
| மீதிகள் மற்றும் கணக்காய்வின் போது கணக்கிடப்பட்டவை ஆகியவற்றுக்கிடையே ரூபா 212 மில்லியன் வேறுபாடு நிலவியது. அதன் பிரகாரம் கணப்பீட்டு வழுவின் அடிப்படையில் சில வெளிநாட்டு கடன்களுக்குரிய அந்நிய செலாவணி விலகல் வேறுபாடு தவறானதாக காணப்பட்டதுடன் அதன் பிரகாரம் அந்நிய செலாவணி விலகலின் கூட்டுத்தொகை தவறானதாக இருந்தது. | செலுத்துவதற்கு காணப்பட்டகடன் தவணைகளில் 50% சதவீதமான அளவினை ஈடுசெய்தல், உடன்படிக்கையின் பிரகாரம் செலுத்துவதற்குள்ள கடன் தவணைகளில் கூடுதலாக செலுத்தப்பட்ட ஏற்றுமதி பிணை முறிகளின் தவணைப் பணத்திற்கு ஈடுசெய்தல் ஆகியவற்றிற்கு கடன் தவணைகளை ஈடுசெய்வதற்கு குறிப்பிடப்பட்டுள்ளது. | வேண்டியமை. |

### 1.6.2.2 உப கடன்

-----------------

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2020 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியான அரச நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ள உப கடன் மீதிகளுக்கிடையே தெரிவு செய்யப்பட்ட உப கடன் மீதிகளில் மாதிரியொன்று பரிசோதிக்கப்பட்டது. அதன் பிரகாரம் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்ட உபகடன் மீதி ரூபா 875 மில்லியனால் அதிகரித்தும் ரூபா 12 மில்லியனால் குறைத்தும் காண்பிக்கப்பட்டிருந்தது. அவ்வாறே அந்நிய செலாவணி வீதத்திற்கு சீராக்கம் செய்யும் போது ஏற்பட்டிருந்த செலாவணி விலகல் நிதிச் செயலாற்றல் கூற்றிற்கு எடுத்துச் செல்லப்படாதிருந்ததுடன் அது தேறிய சொத்துக்கள் சீராக்கல் கணக்கில் சீராக்கப்பட்டிருந்தது. | ரூபா 875 மில்லியன் அதிகரித்து காண்பிக்கப்பட்டுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ள செயற்திட்டங்களின் வெளிநாட்டுப் பணம் இலங்கை ரூபாய்களுக்கு மாற்றும் போது இந்த வேறுபாடு ஏற்பட்டுள்ளது. | சரியான கணக்கீட்டு கொள்கைகளின் அடிப்படையில் நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்பட வேண்டியமை. |

### 1.6.2.3 வெளிநாட்டு மானியங்கள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| 1994 ஏப்ரல் 20 ஆந் திகதிய 30/94 ஆம் இலக்க வெளிநாட்டு உதவிகளை கணக்கு வைப்பதற்குரிய அரச கணக்குகள் சுற்றறிக்கைக்கமைய வெளிநாட்டு உதவிகள் தொடர்பான அனைத்து கொடுக்கல் வாங்கல்களும் பொது திறைசேரியின் வெளிநாட்டு வளங்கள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தினால் மேற்கொள்ளப்பட வேண்டும். 2020 ஆம் ஆண்டின் போது கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களுக்கமைய பொது திறைசேரிக்கு அறிவிக்காது ஏனைய அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களால் ரூபா 1,266 மில்லியனான வெளிநாட்டு மானியங்கள் நேரடியாக பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தது. அவ்வாறே 2018 மற்றும் 2019 ஆம் ஆண்டுகளின் போது பொது திறைசேரிக்கு அறிவிக்காது 24 நிறுவனங்களால் 77 செயற்திட்டங்களுக்காக மீளாய்வாண்டினுள் ரூபா 2,026 மில்லியன் வெளிநாட்டு மானியங்கள் நேரடியாக உரிய நிறுவனங்களுக்கு பெற்றுக்கொள்ளப்பட்டிருந்த போதிலும், அவை மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் கணக்கு வைக்கப்பட்டிருக்கவில்லை. | 1994 ஏப்ரல் 20 ஆந் திகதிய 30/94 ஆம் இலக்க அரச கணக்குகள் சுற்றறிக்கையின் பிரகாரம் அனைத்து வெளிநாட்டு நன்கொடைகளும் வெளிநாட்டு வளங்கள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தின் ஊடாக பெற்றுக்கொள்ளப்பட வேண்டும். | சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் வெளிநாட்டு நன்கொடைகளை பெற்றுக்கொள்ளல் மற்றும் உரிய முறையில் கணக்கு வைக்கப்பட வேண்டும். |

### 1.6.2.4 அரசிற்கு சொந்தமான முயற்சிகளின் மூலதனப் பங்களிப்பு

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) 2020 ஆம் ஆண்டின் போது விவசாய அமைச்சின் 118-2-3-50-2301/11 ஆம் செலவினத்தின் கீழ் ரூபா 773 மில்லியன் தொகை நெல் சந்தைப்படுத்தல் சபைக்காக மற்றும் திறன்கள் அபிவிருத்தி தொழில்சார் கற்கைகள், ஆராய்ச்சி மற்றும் புத்தாக்குனர் இராஜாங்க அமைச்சின் 421-2-4-12-2301/11 செலவின விடயத்தின் கீழ் பூர்த்தி செய்யப்பட்ட தொழில்நுட்ப நிகழ்ச்சித் திட்டங்களுக்காக 10 மில்லியன் படியாக ரூபா 783 மில்லியன் கூட்டுத் தொகையான மூலதன பங்களிப்பு வழங்கப்பட்டிருந்த போதிலும் அது நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப் பட்டிருக்கவில்லை. | 2020 மார்ந் 05 ஆந் திகதிய அமப/20/0513/204/042 ஆம் இலக்க அமைச்சரவை தீர்மானத்தின் பிரகாரம் இந்த உரித்தினை வழங்கியுள்ளமையால் அரச நிதிக் கூற்றுக்களின் குறிப்பு இலக்கம் 21 இல் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. 2021 ஆம் ஆண்டினுள் தேவையான சீராக்கங்களை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும். | சரியான கணக்கீட்டு கொள்கைகளின் அடிப்படையில் நிதிக் கூற்றுக்களை தயாரிக்க வேண்டியமை. |
| (ஆ) அரச மூலதன பங்களிப்பாக ரூபா 1,358 மில்லியன் நகர அபிவிருத்தி அதிகார சபைக்கு வழங்கப்பட்டிருந்தமை அது அரச நிதிக் கூற்றுக்களில் ரூபா 100 மில்லியன் குறைவாக ரூபா 1,258 மில்லியனாக காண்பிக்கப்பட்டிருந்தது. | ரூபா 1,257 மில்லியன் பொது திறைசேரியினால் நிறுவனத்திற்கு மூலதனப் பங்களிப்பாக வழங்கியிருந்த போதிலும அதிகார சபையினால் அது பொது திறைசேரியிடமிருந்து பெற்ற மானியமொன்றாக இனங்காணப்பட்டு கணக்கு வைக்கப்பட்டுள்ளது. இது தொடர்பில் நிறுவனத்திற்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. | சரியான வழிகாட்டல்கள் மற்றும் அறிவுரைகளின் அடிப்படையில் மூலதனப் பங்களிப்பு கணக்கு வைப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டியமை. |

### 1.6.2.5 பொறுப்புகள் மற்றும் நிகழத்தக்க பொறுப்புகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | நிதிக்கூற்றுக்களில் பட்டோலை IV இல் ரூபா 152,826 ஆன பொறுப்புக்கள் காண்பிக்கப்பட்டிருந்தது. அந்த பொறுப்புக்கள் 2020 ஆம் ஆண்டின் போது மேற்கொள்ளப்பட்ட வழங்கல்கள் மற்றும் சேவைகளுக்காக கிரயமானமையால் அவை 2020 ஆம் ஆண்டிற்கான செலவினமாக கணக்கு வைப்பதற்கு அரச நிதிக் கூற்றுக்களில் உண்மையான மற்றும் நியாயமானது என்பது உறுதிப்படுத்தப்படுகின்றது. எனினும் அந்த பொறுப்புக்களை கணக்கு வைக்காது அந்த தேவைப்பாடு நிறைவேறியிருக்கவில்லை. | தற்போது அரச நிதிக் கூற்றுக்களை மேம்படுத்தி காசு அடிப்படையில் தயாரிக்கப்படுகின்றமையால் நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கப்படுவது நீண்ட கால கடன் மீள் செலுத்தல்கள் நிதி மற்றும் நிதியல்லாத சொத்துக்களை பெற்றுக் கொண்டமைக்கான பொறுப்புக்கள் மாத்திரம் ஆகும். | சரியான கணக்கீட்டு கொள்கைகளின் அடிப்படையில் நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்படல் வேண்டும். |
| (ஆ) | நிதிக்கூற்றுக்களின் பட்டோலை IV இன் ரூபா 152,826 ஆக பொறுப்புக்கள் காண்பிக்கப்பட்டிருந்த போதிலும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்ட பொறுப்புக்கள் கூற்றின் பிரகாரம் மொத்த பொறுப்புக்களின் அளவானது ரூபா 181,906 ஆக இருந்தது. அதன் பிரகாரம் நிதிக்கூற்றுக்களின் பட்டோலை இலக்கம் IV இல் குறிப்பிடப்பட்டுள்ள பொறுப்புக்களின் அளவு ரூபா 29,080 இனால் குறைத்து பதிவு செய்யப்பட்டிருந்தது. | 2020 ஆம் ஆண்டினுள் இடம்பெற்ற அமைச்சினை மூடுதல், ஒருங்கிணைத்தல், மாற்றியமைத்தல் மற்றும் விடயப் பரப்பிலான மாற்றங்கள் காரணமாக இந்த வேறுபாடு ஏற்பட்டுள்ளது. | சரியான கணக்கீட்டு கொள்கைகளின் அடிப்படையில் நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | 2017 ஏப்ரல் 27 ஆந் திகதிய 255/2017 ஆம் இலக்க அரச கணக்குகள் சுற்றறிக்கையின் பிரகாரம் நிதியேற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்த மற்றும் அதனை பயன்படுத்திய பின்னர் சேமிப்பினை விஞ்சாத வகையில் பொறுப்புக்கள் ஏற்படுத்தப்பட இயலுமான போதிலும் அதற்கு முரணாக 2020 ஆம் ஆண்டின் போது பாராளுமன்றத்தினால் 49 செலவினத் தலைப்புக்களின் கீழ் 619 செலவின விடயங்களுக்காக நிதியேற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும் அந்த செலவின விடயங்களின் கீழ் 29,369 மில்லியனான பொறுப்புக்கள் ஏற்படுத்தப்பட்டிருந்தது. | வருடாந்த ஒதுக்கீட்டு அதிகாரச்சட்டத்தின் கீழ் ஒதுக்கீடு செய்யப்படும் அல்லது மேலதிக நிதியேற்பாட்டு எல்லையினுள் பொறுப்புக்கள் ஏற்படுத்தப்பட வேண்டும் என 255/2017 ஆம் இலக்க அரச கணக்குகள் சுற்றறிக்கையின் மூலம் அறிவுரை வழங்கப்பட்டுள்ளது. | வெளியிடப்பட்டுள்ள சுற்றறிக்கை ஏற்பாடுகளுக்கமைய நிறுவனத்தை செயற்படுவதற்கு ஆர்வமூட்ட வேண்டியமை. |
| (ஈ) | 4 நிறுவனங்களுடன் ரூபா 44,253 மில்லியனுக்கு அரசு பொறுப்புக்களை ஏற்படுத்தியிருந்ததுடன் அந்த பொறுப்புக்கள் அரச நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்க வில்லை. | பதில் வழங்கப்படவில்லை. | சரியான தகவல்களை உள்ளடக்கி நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்பட வேண்டியமை. |
| (உ) | அரச கொள்கை ரீதியான தீர்மானமொன்றின் அடிப்படையில் கடன் உடன்படிக்கை இலக்கம் 2019011 கொண்ட இலகு புகையிரத புலம்பெயர்வு கட்டமைப்பு செயற்திட்டத்தின் கடன் உடன்படிக்கையை நிறைவு செய்யப்பட்ட காரணத்தினால் 2020 திசெம்பர் 31 ஆந் | இதற்காக நியமிக்கப்பட்டுள்ள குழு இதுவரையிலும் இரு தடவைகள் மாத்திரம் கூடியுள்ளதுடன் உரிய மேலதிக பணிகள் முன்னெடுக்கப்பட்டவாறு உள்ளன. | சரியான வழிகாட்டல்கள் மற்றும் அறிவுரைகளின் அடிப்படையில் நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்பட வேண்டியமை. |

| | | | |
|---|---|---|---|
| | திகதியில் உள்ளபடியான மதியுரை ஒப்பந்த உடன்படிக்கையினை நிறைவு செய்யப்பட்டதன் அடிப்படையில் உரிய மதியுரை நிறுவனங்களினால் நட்டங்கள் மற்றும் இழப்புக்களாக ரூபா 5,896 மில்லியன் உரித்துக் கோரப்பட்டிருந்ததுடன் அது தொடர்பில் அரச நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்க வில்லை. | | |
| (ஊ) | 2017 ஏப்ரல் 27 ஆந் திகதிய 255/2017 ஆம் இலக்க அரச கணக்குகள் சுற்றறிக்கையின் பிரகாரம் எந்தவொரு பொறுப்பும் எதிர்வரும் வருடத்திற்கு முன்கொண்டு செல்ல முடியாதென அறிவுரை வழங்கப்பட்டிருந்தது. மீளாய்வாண்டின் இறுதியளவில் 42 செலவின தலைப்புக்களின் கீழ் 86 செலவின விடயங்களுக்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த தேறிய நிதிஏற்பாடு பயன்படுத்தப்பட்டிருந்த மையால் சேமிப்புக்கள் ஏதும் வெளிப்படுத்தப் பட்டிருக்கவில்லை. எவ்வாறான போதிலும் அந்த செலவின விடயங்களின் கீழான நிதியேற்பாடு நீங்கலாக ரூபா 41,601 மில்லியனான பொறுப்புக்கள் ஏற்படுத்தப்பட்டிருந்தன. | வருடாந்த ஒதுக்கீட்டுக் கணக்கின் கீழ் ஒதுக்கப்படும் அல்லது மேலதிக நிதியேற்பாட்டு எல்லையினுள் பொறுப்புகள் ஏற்படுத்தப்பட வேண்டும் என 255/2017 ஆம் இலக்க அரச கணக்குகள் சுற்றறிக்கையின் மூலம் அறிவுரை வழங்கப்பட்டுள்ளது. | வெளியிடப்பட்டுள்ள சுற்றறிக்கை ஏற்பாடுகளுக்கமைய நிறுவனம் செயற்படுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (எ) | 105 செலவின தலைப்புக்களின் கீழான 676 செலவின விடயங்களுக்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்த தேறிய நிதியேற்பாட்டில் பயன்பாட்டின் பின்னர் ரூபா 10,262 மில்லியனான நிதியேற்பாடு எஞ்சியிருந்தது. அந்த எஞ்சிய நிதியேற்பாடு ரூபா 69,745 இனால் விஞ்சி ரூபா 80,013 மில்லியனான பொறுப்புக்கள் ஏற்படுத்தப்பட்டிருந்தன. | - மேற்படி - | -மேற்படி- |

### 1.6.2.6 அரசிற்கு சொந்தமான தேறிய முதலீடுகள் மற்றும் மீள்நிதியிடல் கடன் பெற்றுக்கொள்ளல்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| இலங்கை மத்திய வங்கியில் காணப்படும் தகவல்களின் பிரகாரம் இலங்கை மத்திய வங்கியின் பிரதேச அபிவிருத்தி திணைக்களத்தினால் நடாத்திச் செல்லப்படும் சுழற்சி கடன் முன்மொழிவுகளுக்குரிய ரூபா 13,209 மில்லியன் கூட்டுப்பெறுமதியான 10 கணக்கு மீதிகள், இலங்கை மத்திய வங்கிக்கு உரித்தானதல்ல எனவும் அம்மீதிகள் இலங்கை அரசிற்கு சொந்தமான முதலீடுகள் மற்றும் மீள்நிதியிடல் கடன் எடுத்தல் எடுத்தல் என கணக்காய்விற்கு அறிவிக்கப்பட்டிருந்த போதும் அக்கணக்கு மீதிகள் அரசின் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. | இந்த கடன் முன்மொழிவுத் திட்டங்களுக்குரிய கணக்கு மீதிகள் தொடர்பில் இலங்கை மத்திய வங்கியின் உத்தியோகத்தர்களுடன் கலந்துரையாடி உண்மையாக அரசின் கணக்குகளுக்கு எடுக்க வேண்டிய கணக்கு மீதிகள் காணப்பட்டால் இணக்கப்பாடு எட்டப்பட்டதன் பின்னர் பொருத்தமானவாறு கணக்குகளில் உள்ளடக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்பது. | தேவையான அனைத்து தகவல்களையும் உள்ளடக்கிய நிதிக்கூற்றுக்களை நாளதுவரையாகவும் சரியானதாகவும் சமர்ப்பிக்க வேண்டும். |

### 1.6.2.7 செயற்பாடற்ற கணக்கு மீதிகள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| 2020 ஆம் ஆண்டிற்கான அரசின் நிதிக்கூற்றுக்களினுள் நீண்டகாலமாக விளைவற்று காணப்படும் 10 கணக்குகளுக்குரிய ரூபா 7,407 மில்லியன் மீதிகள் தீர்க்கப்படாது காணப்பட்டன. | பிரதான பேரேட்டுக் கணக்குகள் நீண்ட காலமாக செயற்பாடற்றுக் காணப்பட்ட போதிலும், அவற்றை புத்தகங்களிலிருந்து பதிவழிப்பதற்கு முன்னர் அந்த கணக்குகள் தொடமர்ந்தும் கட்டமைப்பில் பேணப்பட வேண்டுமா என்பது தொடர்பில் தீர்மானிப்பதற்காக திறைசேரி செயற்பாட்டு திணைக்களத்தின் மேலதிக பணிப்பாளர் நாயகத்தின் தலைமையில் குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளதுடன், அந்த குழுவின் பரிந்துரை கிடைத்த பின்னர் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படும். | நிதிக்கூற்றுக்களில் தீர்ப்பனவு செய்யப்பட்ட மற்றும் நாளதுவரையாக்கப்பட்ட பெறுமதிகள் உள்ளடக்கப்பட வேண்டும். |

### 1.6.2.8 நிதியல்லாத சொத்துக்கள்

கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்பட்ட அரச கணக்குகள் திணைக்களத்திற்கு கிடைத்துள்ள மதிப்பீட்டு அறிக்கைகளுக்குரிய நிறுவனங்கள் மற்றும் அவற்றில் குறிப்பிடப்பட்டுள்ள பெறுமதிகள் தொடர்பில் பட்டோலைகள் மற்றும் அரச நிதிக்கூற்றினுள் உள்ளடக்கப்பட்டுள்ள குறிப்பு இலக்கம் 11 இல் உள்ளடங்கியுள்ள நிதியல்லாத சொத்துக்கள் தொடர்பிலான தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது பின்வரும் வேறுபாடுகள் அவதானிக்கப்பட்டன.

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| (அ) மாதிரி அடிப்படையில் தெரிவு செய்யப்பட்ட 51 நிறுவனங்களின் அரச நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ள காணிகளின் பெறுமதிகள், விலைமதிப்பீட்டு திணைக்களத்தினால் மதிப்பீடு செய்யப்பட்ட பெறுமதியை விட ரூபா 130,886 மில்லியன் | விலைமதிப்பீட்டு திணைக்களத்தினால் காணியொன்று அல்லது கட்டிடமொன்று மதிப்பீடு செய்யப்பட்டு அறிக்கையிடப்பட்ட பின்னர் அந்த பெறுமதி CIGAS கட்டமைப்பின் ஊடாக கணக்கு வைப்பது குறித்த நிறுவனத்திற்குரிய | சரியான வழிகாட்டல்கள் மற்றும் நிதியல்லாத சொத்துக்கள் கணக்கு வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | குறைவாக ரூபா 3,016 மில்லியன் கூடுதலாகவும் காண்பிக்கப்பட்டிருந்தது. | பொறுப்பாகும். | |
| (ஆ) | மாதிரி அடிப்படையில் தெரிவு செய்யப்பட்ட 73 நிறுவனங்களின் அரச நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ள கட்டிடங்களின் பெறுமதிகள், மதிப்பீடு செய்யப்பட்ட பெறுமதியை விட ரூபா 22,936 மில்லியன் குறைவாக ரூபா 37,362 மில்லியன் கூடுதலாகவும் காண்பிக்கப்பட்டிருந்தது. | விலைமதிப்பீட்டு திணைக்களத்தினால் காணியொன்று அல்லது கட்டிடமொன்று மதிப்பீடு செய்யப்பட்டு அறிக்கையிடப்பட்ட பின்னர் அந்த பெறுமதி CIGAS கட்டமைப்பின் ஊடாக கணக்கு வைப்பது குறித்த நிறுவனத்திற்குரிய பொறுப்பாகும். | சரியான வழிகாட்டல்கள் மற்றும் நிதியல்லாத சொத்துக்கள் கணக்கு வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (இ) | அரச நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2020 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியான நிதியல்லாத சொத்துக்கள் (Non – Financila Assets) பெறுமதி ரூபா 1,776,368 மில்லியன் ஆகும். அதற்குரிய நிதிக்கூற்றுக்களின் குறிப்பு இலக்கம் 16 இல் உள்ளடக்கப்பட்டுள்ள நிறுவனங்களிடையே மாதிரி அடிப்படையில் தெரிவு செய்யப்பட்ட 102 நிறுவனங்களின் 2020 ஆம் ஆண்டுக்கான வருடாந்த நிதிக்கூற்றுக்களில் ஏ.சீ.ஏ – 6 மாதிரியில் அதாவது "நிதியல்லாத சொத்துக்கள் தொடர்பான கூற்றில்" உள்ளடக்கப்பட்டுள்ள 2020 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியான நிதியல்லாத சொத்துக்களின் மீதியுடன் இணக்கம் செய்யும் போது 05 சொத்து வகைகளுக்குரிய ரூபா 15,220 மில்லியனுக்கு மேலதிகமான சொத்துக்களிள் 06 வகைகளுக்குரிய ரூபா 26,641 மில்லியனை விட குறைவாக கணக்கு வைக்கப்பட்டிருந்தது. அதன் | நிதிக்கூற்றுக்களை தயாரிக்கும் போது அந்த நிதிக்கூற்றுக்களை திறைசேரியின் புத்தகங்களுடன் இணக்கம் செய்யப்படும் கண்கக மீதிகள் மாத்திரம் உள்ளடக்கப்படும். | நிதிக்கூற்றுக்கள் சரியான தகவல்களை உள்ளடக்கி தயாரிக்கப்பட வேண்டியமை. |

பிரகாரம், அரச நிதிக்கூற்றுக்களினுள் நிதியல்லாத சொத்துக்களின் மீதி ரூபா 11,421 இனால் குறைவாக கணக்கு வைக்கப்பட்டிருந்தது.

### 1.6.2.9 இணக்கம் செய்யப்படாத கணக்குகள் அல்லது அறிக்கைகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | விடயம் | நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் பெறுமதி | இலங்கை மத்திய வங்கியின் அறிக்கைளின் பிரகாரம் பெறுமதி | வேறுபாடு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|---|---|
| (அ) | இலங்கை மத்திய வங்கியின் முற்பணங்கள் | 153,079,071,400 | 153,061,900,000 | 17,171,400 | இலங்கை மத்திய வங்கியின் தகவல்களை பெற்று பதில் பின்னர் சமர்ப்பிக்கப்படும். | உரிய முறையில் இணக்கம் செய்தல் மேற்கொள்ள வேண்டியமை. |
| (ஆ) | இலங்கை மத்திய வங்கியினால் பேணப்படும் அரச வைப்புகள் | 4,059,403,678 | 1,460,512,000 | 2,598,891,678 | இலங்கை மத்திய வங்கியினால் பேணிச் செல்லப்படும் DST கணக்குகள் 05 இன் மீதிகள் சரியானது என சான்றுபடுத்தல். | -மேற்படி- |

### 1.6.3 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடனான இணக்கமின்மைகள்

2020 திசெம்பர் 31 ஆம் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அரசாங்கத்தின் நிதிக் கூற்றுக்கள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட பரிசோதனைகளின் போது பின்வரும் பின்வரும் சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் ஆகியவற்றுடன் இணங்காமைகள் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணக்கமின்மைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) 2003 இன் 3 ஆம் இலக்க நிதி முகாமைத்துவ (பொறுப்பு) அதிகாரச்சட்டம் (i) | 2013 இன் 15 ஆம் இலக்க நிதி முகாமைத்துவ (பொறுப்புகள்) (திருத்திய) அதிகாரச்சட்டத்தினால் திருத்தப்பட்ட 2003 இன் 3 ஆம் இலக்க நிதி முகாமைத்துவ (பொறுப்பு) அதிகாரச்சட்டத்தின் பிரகாரம், ஏதேனுமொரு வருடத்தின் இறுதியில் நிலவக்கூடிய ஆகக்கூடிய பொறுப்புக்களின் பெறுமதி அந்த வருடத்திற்கான மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 80 சதவீதத்தினை மிஞ்சக்கூடாது. அந்த எல்லைகளுக்கமைய நிதி அமைச்சு செயற்பட்டுள்ளதாக அமைச்சின் நிதிக் கூற்றுக்களுக்கமைய புலப்பட்ட போதிலும், 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கணக்கீடு செய்யப்படாத வெளிநாட்டுக் கடன் மற்றும் நிதி நிலைமைக் கூற்றிற்கு புறம்பாக கணக்கு வைக்கப்பட்டுள்ள வெவ்வேறு பொது முயற்சிகளுக்குரிய பொறுப்புகளையும் கவனத்திற்கொள்ளும் போது அந்த உரிய எல்லைகள் 97.7 சதவீதம் மீறப்பட்டுள்ளமை அவதானிக்கப்பட்டது. விபரங்கள் பின்வருமாறு. | தற்போது ஏற்பட்டுள்ள கொவிட் 19 தொற்றுநோய் நிலைமை காரணமாக எதிர்பார்த்தவாறு அரச நிதிச் செயன்முறைக்கு மற்றும் பொருளாதாரத்திற்கு தாக்கமொன்று ஏற்பட்டுள்ளமையால் சுகாதார மற்றும் ஏனைய துறைகள் தொடர்பில் உயர் அரச செலவினம் மேற்கொள்ள நேர்ந்தது. | அதிகாரச் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| **பொறுப்புகள்** | **2020 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியான பொறுப்புகளின் பெறுமதி*** |
|---|---|
| | ரூபா ரூபா பில். |
| வங்கி மேலதிகப்பற்று | 464 |
| அரச பொது படுகடன் | 14,845 |
| நிதிக்கூற்றுக்களினுள் கணக்கு வைக்கப்படாத பொறுப்புகள்: | |
| - ஐந்தொகைக்கு புறம்பாக கணக்கு வைக்கப்படும் வெளிநாட்டுக் கடன் | 323 |
| - கணக்கு வைக்கப்படாத வெளிநாட்டுக் கடன் | 6 |
| மொத்த பொறுப்புகள் | 15,638 |
| மதிப்பிடப்பட்ட மொத்த தேசிய உற்பத்தி | 16,003 |
| **மொத்த பொறுப்புகள் மதிப்பிடப்பட்ட மொத்த உள்நாட்டு உற்பத்தியின் சதவீதமாக** | **97.7** |

- பொது திறைசேரியின் பிணை முறியின் அடிப்படையில் அரச முயற்சிகளால் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ள கடனுக்காக வங்கிகளுக்கு வழங்கப்பட்டுள்ள பிணைமுறிகள் மற்றும் நிவாரணக் கடிதங்களின் பெறுமதியான ரூபா 1,059 பில்லியன் மற்றும் அமைச்சு, திணைக்களங்கள் மற்றுமு் விசேட செலவின அலகுகளில் வருடாந்த நிதிக்கூற்றுக்களில் பொறுப்புகள் கூற்றினுள் உள்ளடக்கப்பட்டுளு்ள ரூபா 153 பில்லியன் பெறுமதி மேற்படி பொறுப்புகளினுள் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) ‘‘2006ஆம் ஆண்டின் இறுதியில் உள்ளபடியான பாதீட்டு விலகல் அந்த வருடத்திற்காக மதிப்பீடு செய்யப்பட்ட மொத்த உள்நாட்டு உற்பத்தியின் 5 (ஐந்து) சதவீதத்தினை விஞ்சாது உள்ளது தொடர்பில் பொறுப்புடன் செயற்படுவதன் மூலம் அரச கடனின் அளவினை குறித்த மட்டம் வரையிலும் குறைத்தல்’’ அரசாங்கத்தினால் பின்பற்றப்பட வேண்டிய பொறுப்புடனான நிதி முகாமைத்துவத்தினை அடிப்படையாக கொண்ட குறிக்கோளாக 2003 இன் 03 ஆம் இலக்க நிதி முகாமைத்து (பொறுப்புகள்) அதிகாரச்சட்டத்தின் 3(அ) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ளது.

எவ்வாறான போதிலும், மீளாய்வாண்டிற்கான மதிப்பீடு செய்யப்பட்ட பாதீட்டு விலகல் மதிப்பீடு செய்யப்பட்ட மொத்த தேசிய உற்பத்தியின் ஐந்து சதவீதத்தினை விஞ்சாத வகையில் மதிப்பீடு செய்வதற்கும், மீளாய்வாண்டின் இறுதியிலான பாதீட்டு விலகல் மதிப்பீடு செய்யப்பட்ட மொத்த தேசிய உற்பத்தியின் ஐந்து சதவீதத்தினை விஞ்சாத வகையில் பேணுவதற்கும் நிதி அமைச்சு தவறியுள்ளமை அவதானிக்கப்பட்டது. விபரங்கள் பின்வருமாறு.

| கணிப்பீட்டு அடிப்படை / நடைமுறை | மதிப்பிடப்பட்ட மொத்த உள்நாட்டு உற்பத்தி | பாதீட்டு விலகல் | | மதிப்பிடப்பட பாதீட்டு விலகல், மதிப்பிடப்பட்ட மொத்த உள் நாட்டு உற்பத்தியின் சதவீதமாக | உள்ளபடியான பாதீட்டு விலகல், மதிப்பிடப்பட்ட மொத்த உள் நாட்டு உற்பத்தியின் சதவீதமாக |
|---|---|---|---|---|---|
| | | மதிப்பிடப்பட்ட | உள்ளபடியான | | |
| | ரூபா பில். | ரூபா பில். | ரூபா பில். | | |
| கணக்கீட்டு | 16,003 | 3,163 | 2,116 | 19.76 | 13.20 |
| பொருளாதார | 16,003 | 1,687 | 1,668 | 10.54 | 10.42 |

2020 ஆம் ஆண்டுக்கான மதிப்பிடப்பட்ட பாதீட்டு விலகல் ரூபா 1,266 பில்லியனாவதுடன், அதன் பிரகாரம், அது அப்போதைய மதிப்பிடப்பட்ட மொத்த உள்நாட்டு உற்பத்தியான ரூபா 16,003 பில்லியனில் 7.9 சதவீதம் ஆகும். 2015 ஆம் ஆண்டு முதல் தொடர்ச்சியாக பொருளாதார வளர்ச்சி வீழ்ச்சியடைந்தமை மற்றும் 2019 ஆம் ஆண்டின் போது இடம்பெற்ற உயிர்த்த ஞாயிறு தாக்குதல் காரணமாக பொருளாதார பணிகள் வலுவிழந்தமை மற்றும் கொவிட் 19 தொற்றுநோய் நிலைமை காரணமாக அரச நிதிச் செயன்முறைக்கு மற்றும் பொருளாதாரத்தி

அதிகாரச் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் செயற்பட வேண்டும்.

| | | | | |
|---|---|---|---|---|
| | | | ற்கு தாக்கமொன்று ஏற்பட்டுள்ளமையால் சுகாதார மற்றும் ஏனைய துறைகள் தொடர்பில் உயர் அரச செலவினம் மேற்கொள்ள நேர்ந்தது. | |
| (ஆ) | 2020 இன் 06 ஆம் இலக்க ஒதுக்கீட்டு அதிகாரச்சட்டம் | அமைச்சரால் அரசின் அங்கீகார அமைச்சரின் ஒப்புதலுடன், சட்டத்தின் மூன்றாவது அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள அதிகபட்ச வரம்புகள் மற்றும் குறைந்தபட்ச வரம்புகள் ஏதேனும் 2021 மே 31 ஆந் திகதியினுள் அல்லது அதற்கு முன் மாற்றப்படல் அல்லது திருத்தங்கள் செய்ய இயலுமான போதிலும், கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின்படி, அவை 07 நிறுவனங்களின் எல்லைகள் அவ்வாறு மாற்றுவதற்கு/திருத்த எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. | 06 தலைப்புகளின் எல்லைகளை திருத்துவதற்கான கோரிக்கைகள் 2020 திசெம்பர் 31 இற்குள் சமர்ப்பிக்கப்படவில்லை என்பதுடன், 04 தலைப்புகளின் திருத்தங்களுக்கு சமர்ப்பிக்கப்படாத எல்லைகள் காணப்படுகின்றன | சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய செயல்பட வேண்டும். |
| (இ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவை | | | |
| i. | நிதிப்பிரமாணம் 373 | அமைச்சு மற்றும் திணைக்களதங்களின் கட்டுநிதிக் கணக்கு மீதிகள் ஒவ்வொரு வருடத்தினதும் திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியாக தீர்க்கப்பட வேண்டிய போதிலும், 2020 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியாக பல வருடங்களாக முன்கொண்டுவரப்படும் 03 கட்டுநிதிகளுக்குரிய ரூபா 118 மில்லியன் கூட்டுத்தொகையான கணக்கு மீதிகள் தீர்க்கப்பட்டிருக்கவில்லை. | மீன்பிடிக் கடற்றொழில் கூட்டுத்தாபனத்தில் நிலவும் கடும் நிதி நெருக்கடி காரணமாக இந்த 03 கணக்குகளில் ஒன்றின் மீதித்தொகையை செலுத்த முடியவில்லை என அமைச்சின் செயலாளர் தெரிவித்துள்ளார். | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் செயல்பட தேவையான வழிகாட்டுதல்களைப் பின்பற்ற வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | மற்றுமொரு நிலுவைத் தொகையை செலுத்துவதற்கு வெளிநாட்டு தூதரகங்களில் இருந்து தகவல்களை சேகரித்து மேலதிக நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் மீதமுள்ள மீதியை எவ்வாறு செலுத்துவது என்பது குறித்து சம்பந்தப்பட்ட அமைச்சுக்கு கடிதம் அனுப்பப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. | |
| ii. | நி.பி. 518 | பல ஆண்டுகளாக முன்கொண்டுவரப்படும் 19 திறைசேரியால் அங்கீகரிக்கப்பட்ட முற்பணக் கணக்குகளின் ரூபா 1,353 மில்லியன் தேறிய நிலுவைகள், அந்த சம்பந்தப்பட்ட அமைச்சுகள் மற்றும் திணைக்களங்களை வினவி மூடுவதற்கு உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை. | நிதிப் பிரமாணத்தின் மூலம் தேவையான வழிகாட்டுதல்கள் வெளியிடப்பட்டுள்ளதுடன், அதற்கமைய உரிய செலவினத் தலைப்பால் செயல்பட வேண்டும் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன். | திணைக்களத்தினால் தேவையான வழிகாட்டுதல்களையும் ஆலோசனைகளையும் வழங்க வேண்டும். |
| iii. | நி.பி. 571 | 02 வருடங்களுக்கும் மேலான வைப்புத்தொகைகள் தொடர்பில் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்றாலும், மாதிரி அடிப்படையில் தேர்ந்தெடுக்கப்பட்ட 46 நிறுவனங்களில் உள்ள 125 வைப்பு கணக்குகளின் மொத்த மதிப்பு ரூபா 2,804.73 மில்லியன் வைப்புகள் கணக்குகளில் 02 வருடங்கள் முதல் 05 வருடங்களுக்கு மேற்பட்டகாலமாக முன்கொண்டுவரப்பட்டிருந்தது. | அமைச்சுக்கள், திணைக்களங்கள் மற்றும் மாவட்டச் செயலகங்கள் மூலம் பொதுக் கணக்குத் திணைக் | தேவையான வழிகாட்டுதல்களையும் ஆலோசனைகளையும் திணைக்களம் வழங்க |

களத்திற்கு வேண்டும்.
அனுப்பப்பட்ட வருடாந்த ஒப்பீட்டு அறிக்கைகள் மற்றும் நேர பகுப்பாய்வு அறிக்கைகளின் படி, மீதியானது 02 வருடங்களுக்கும் மேற்பட்ட மீதிகள் தொடர்பில் நி.பி. 570 இன் பிரகாரம் பகுப்பாய்வுகள் செய்யப்பட்டு இணக்கமற்ற வைப்புத் தொகைகள் அடையாளம் காணப்பட்டு 571 இன் படி செயல்பட சம்பந்தப்பட்ட நிறுவனங்களுக்கு அறிவுறுத்தப்பட்டு ள்ளது. அவ்வாறே, 2020.12.31 இல் உள்ள வைப்பு கணக்குகளின் வருடாந்த ஒப்பீட்டு அறிக்கைகளின் அடிப்படையில் 02 ஆண்டுகளுக்கும் மேலான நிலுவைகளை பின்தொடரவும் தற்போது திட்டமிடப் பட்டுள்ளது.

## 2. நிதி மீளாய்வு

### 2.1 செலவின முகாமைத்துவம்

#### 2.1.1 ஏற்பாடு செய்யப்பட்டிருந்த நிதியேற்பாடு பயன்படுத்தப்படாமை

**(i) நிதியேற்பாடு முழுமையாக எஞ்சுதல்**

மீளாய்வாண்டின் போது பாராளுமன்றத்தினால் 146 செலவினத் தலைப்புகளின் கீழ் 764 செலவின விடயங்களுக்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ரூபா 18,730.15 மில்லியனான நிதியேற்பாட்டில் எதுவித பயன்பாட்டையும் மேற்கொள்ளாது மொத்த தேறிய நிதியேற்பாடும் எஞ்சியிருந்தது.

**(ii) நிதியேற்பாட்டில் 25 சதவீதத்திற்கும் மேலதிகமாக எஞ்சுதல்**

199 செலவினத் தலைப்புகளின் கீழ் 2342 செலவின விடயங்களுக்காக பாராளுமன்றத்தில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த தேறிய நிதியேற்பாட்டில் எதிர்பார்த்த நோக்கங்களுக்காக பயன்படுத்தாமையினால் ஏற்பாடு செய்யப்பட்ட நிதியேற்பாட்டின் 25 சதவீதம் முதல் 99 சதவீதம் வரையான வீச்சில் மூலதன ரூபா 122,523.17 மில்லியனான நிதியேற்பாடு எஞ்சியிருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2020 திசெம்பர் 31 ஆம் திகதிய நிலவரப்படி, எரிபொருள் விலை உறுதிப்படுத்தல் நிதியத்தினால் ரூபா 26,673.20 மில்லியன் செலுத்த வேண்டியிருந்தது. அந்த பெறுமதிக்குரிய திறைசேரி உண்டியல்களின் முகமதிப்பு ரூபா 29,200.75 மில்லியன் ஆகும். அதன்படி, தொடர்புடைய திறைசேரி உண்டியல்களின் கழிவு மதிப்பு ரூபா 2,527.55 மில்லியன் வித்தியாசமானது, இந்த செயல்முறை தொடர்பாக திரண்ட நிதியத்திற்கு செலவுச் சுமையாக இருந்தது. | எதிர்காலத்தில், அமைச்சரவை தீர்மானங்கள் எடுக்கப்பட்ட பின்னர், அதற்கான பொறுப்புகள் திறைசேரியின் பொறுப்பாக இருக்கும் என்பதுடன், அதன்பின் 100% சம்பந்தப்பட்ட பொறுப்புகள் தீர்க்கப்படும். | திரண்ட நிதியத்திற்கு செலவுச் சுமையை கொடுக்காத வகையில் செயல்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | 2/2014 ஆம் இலக்க மற்றும் 2014 ஜூலை 23 ஆந் திகதிய தேசிய வரவு செலவுத் திட்ட சுற்றறிக்கைகளின்படி, கள உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்பட்ட மோட்டார் சைக்கிள்களின் பதிவு உரிமைகள் 5 ஆண்டுகளுக்குப் பிறகு தனிப்பட்ட பெயருக்கு மாற்றப்படும், அந்த நேரத்தில் மோட்டார் சைக்கிள்களை விற்பனை செய்வதற்கு அல்லது அந்நியப்படுத்துவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்ட போதிலும், 2020 ஆம் ஆண்டளவில், 05 வருட காலம் நிறைவடையும் ரூபா 17,410 மில்லியன் பெறுமதியான மோட்டார் சைக்கிள்களின் சட்டப்பூர்வ உரிமை அந்த உத்தியோகத்தர்களுக்கு மாற்றப்படவில்லை. | தேசிய வரவு செலவுத திட்ட திணைக்களத்துடன் கலந்தாலோசித்து மேலதிக நடவடிக்கை எடுக்கப்படும். | சுற்றறிக்கை அறிவுறுத்தல்களின்படி செயல்பட வேண்டும். |
| (இ) | 2010 திசெம்பர் 07 ஆம் திகதி தேசிய வரவு செலவுத் திட்ட சுற்றறிக்கை இலக்கம் 150 இன் படி, ஏனைய அரச நிறுவனங்களின் சார்பாக நிதி குத்தகையின் கீழ் கொள்வனவு செய்யப்பட்ட மொத்தத் தொகை ரூபா 3,099 மில்லியன் வாகனங்கள் குத்தகைக் காலம் நிறைவடைந்திருந்த போதிலும், அவற்றை உரிய நிறுவனங்களிடம் ஒப்படைக்க நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | தேசிய வரவு செலவுத் திணைக்களத்துடன் கலந்தாலோசித்து மேலதிக நடவடிக்கை எடுக்கப்படும். | -மேற்படி- |

## 4. கணக்களிதகைமையும் நல்லாளுகையும்

### 4.1 நிதிக்கூற்றுக்களை சமர்ப்பித்தல்

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2005 ஆம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்ட கணக்கு படிவத்திற்கு ஏற்ப நிதிக்கூற்றுகளை தயாரிக்கும் பணி தொடங்கப்பட்டு, 2018 ஆம் ஆண்டிற்கான 254 வரவு செலவுத் திட்ட முன்மொழிவின் பிரகாரம் 10 ஆண்டுகளாகப் பயன்படுத்தப்படும் தற்போதைய மேம்படுத்தப்பட்ட பண அடிப்படை முறையிலிருந்து அட்டுறு அடிப்படைக் கணக்கியல் முறையின் கீழ் நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதற்காக மாற்ற முடிவு செய்யப்பட்டுள்ளது. இருந்தது. அமைச்சரவையின் ஒப்புதலுக்காக (Road Map) சமர்ப்பிக்கப்பட்ட சாலை வரைபடத்தில் உள்ளடங்கிய பணிகளுக்கான காலச் சட்டகத்தை அரச கணக்குத் திணைக்களம் திருத்தியமைத்திருந்த போதிலும், அதற்கு முறையான அங்கீகாரம் வழங்கப்படவில்லை. மேலும், அமைச்சரவைப் பத்திரத்தின்படி, ஒவ்வொரு ஆண்டும் முடிவடைந்து ஒரு மாதத்திற்குப் பிறகு, சம்பந்தப்பட்ட செயல்முறைகளின் முன்னேற்றம் அமைச்சரவைக்கு அறிவிக்கப்பட வேண்டும், ஆனால் 2021 நவம்பர் 05 ஆந் திகதி வரையிலும் அத்தகைய முன்னேற்றம் | எதிர்காலத்தில் ஒப்புதல் கிடைக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. இந்தச் செயல்பாட்டில் இதுவரை எந்த முன்னேற்றமும் ஏற்படவில்லை என்பதை ஒப்புக்கொள்கிறேன், மேலும் இந்த ஆண்டின் இறுதியில் அதற்கேற்ப முன்னேற்றத்தைப் அறிக்கையிட ஒரு குறித்து வைத்துக்கொள்கின்றேன். | வரவு செலவுத் திட்ட பரிந்துரைகளை அமலபடுத்த வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | எதுவும் அறிக்கையிடப் பட்டிருக்கவில்லை. | | |
| (ஆ) | அரசாங்க நிதிக்கூற்றுக்களின் உள்ளடக்கம் நிதி செயலாற்றல் அறிக்கை மற்றும் நிதி நிலைமைக்கூற்று ஆகியவற்றுக்கு இடையே நேரடி தொடர்பு காணப்படவில்லை. அதாவது, நிதி செயலாற்றல் அறிக்கையானது மீளாய்வாண்டுக்கான வரவு செலவுத் திட்டத்துடன் தொடர்புடைய உண்மையான நிலைமையினை மட்டுமே பிரதிநிதித்துவம் செய்கின்றது. | எதிர்காலத்தில் அறிமுகப்படுத்தப்படும் கணக்கியல் சட்டகங்கள் மற்றும் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க கணக்குகளை தயாரிப்பதில் இந்த நிலைமை சரிசெய்யப்படும் என்று நம்பப்படுகிறது. | முறையான கணக்கியல் சட்டகங்கள் மற்றும் கணக்கீட்டு நியமங்களின் அடிப்படையில் நிதிக்கூற்றுக்களை தயாரித்தல். |
| (இ) | நிதி நிலைமைக் கூற்றின் பிரகாரம், மொத்த வெளிவாரிப் பொறுப்புகளின் பெறுமதியானது ரூபா 15,321,652 ஆன போதிலும், அதற்கு ஒப்பாக மொத்த சொத்துக்களின் பெறுமதி ரூபா 2,671,465 மாத்திரமான காரணத்தால் மொத்த சொத்துக்களை விட மொத்த பொறுப்புகள் ரூபா 12,650,187 இனால் விஞ்சியிருந்தது. | பொது முயற்சிகள் உட்பட முழு அரச துறைக்குமான திரண்ட கணக்குகளைத் தயாரிக்கும் போது இந்த நிலைமை தீர்க்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. | துல்லியமான தகவல்களை உள்ளடக்கிய நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட வேண்டியமை. |
| (ஈ) | நிதி நிலைமைக்கூற்றில் சட்டரீதியான மற்றும் ஏனைய நிதியங்களில் உள்ளடங்கும் தேறிய சொத்துக்கள் சீராக்கல் கணக்கின் வரவு மீதியான ரூபா 12,072,662 ஆன பெறுமதியானது மூலதனத்திலான மாற்றங்கள் கூற்றில் காண்பிக்கப்பட்டிருக்க வில்லை. | மூலதன்திலுள்ள ஒவ்வொரு ஒதுக்கத்தினதும்/நிதியத்தின் தன்மை மற்றும் நோக்கங்கள் இதுவரை வழங்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் படிவத்தில் வெளியிடப்படவில்லை. எதிர்காலத்தில் தேவையான வெளிப்படுத்தல்களை செய்ய நான் குறித்துக் கொள்கின்றேன். | துல்லியமான தகவல்களை உள்ளடக்கிய நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட வேண்டியமை. |

| | | | |
|---|---|---|---|
| (உ) | நிதி நிலைமைக்கூற்றில் உள்ளடக்கப்பட்டுள்ள சொத்துக்கள் மற்றும் பொறுப்புகள், நடைமுறை மற்றும் நடைமுறை அல்லாதது என வகைப்படுத்தப்பட்டிருக்க வில்லை. | எதிர்காலத்தில் அறிமுகப்படுத்த திட்டமிடப்பட்டுள்ள கணக்கீட்டு சட்டகத்தின் மற்றும் கணக்கீட்டு நியமங்களின் அடிப்படையில கணக்கீட்டினை மேம்படுத்தும் போது பொருத்தமான வகைப்பாடுகளைச் செய்ய எதிர்பார்க்கப்படுகிறது. | முறையான கணக்கீட்டு சட்டகத்தின் மற்றும் கணக்கீட்டு நியமங்களின் அடிப்படையில் கணக்கு தயாரிக்கப்பட வேண்டும். |
| (ஊ) | திறைசேரி செயற்பாட்டு திணைக்களத்திற்கு எரிபொருள் விலை உறுதிப்பாட்டு நிதியத்திலிருந்து 2020 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியாக ரூபா 26,673.20 மில்லியன் அறவிடப்பட வேண்டியதாக காணப்பட்ட தொகை 2020 ஆம் ஆண்டின் அரச நிதிக்கூற்றுக்களில் நிதி நிலைமைக் கூற்றில் பொறுப்புகளினுள் (மறைப் பெறுமதியாக காண்பித்து) பல்வேறு கணக்குகளின் கீழ் எரிபொருள் விலை உறுதிப்பாட்டு கணக்காக பெயரிடப்பட்டு தவறாக காண்பிக்கப்பட்டிருந்தது. | 2020 ஆம் ஆண்டில் அரச நிதிக்கூற்றுக்களில் நிதி நிலைமை அறிக்கையில் உள்ள பல்வேறு கணக்குகளின் கீழ், எரிபொருள் விலை நிலைப்படுத்தல் கணக்கு என ரூபா 26,673,196,758 என்ற மறை பெறுமதியை காண்பிப்பது சரியானது. இந்த பரிவர்த்தனைகளை கணக்கு வைப்பதற்கான பிரதான பேரேட்டில் பேரேட்டுக் ஒரு கணக்காக எரிபொருள் விலை உறுதிப்பாட்டு நிதியம் என கணக்கொன்று 2020 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டமையால், அந்த கணக்கின் மீதி 2020 ஆம் ஆண்டிற்கான அரச நிதிக்கூற்றுக்களில் இவ்வாறு காட்டப்பட்டுள்ளது. | முறையான கணக்கீட்டு சட்டகத்தின் மற்றும் கணக்கீட்டு நியமங்களின் அடிப்படையில் கணக்கு தயாரிக்கப்பட வேண்டும். |
| (எ) | 2020 மார்ச் 31 ஆந் திகதி பிரதமரால் சமர்ப்பிக்கப் பட்டுள்ள 20/0684/204/060 ஆம் இலக்க அமைச்சரவை விஞ்ஞாபனத்தின் பிரகாரம், நிதி அமைச்சின் ஆண்டறிக்கையுடன் எரிபொருள் விலை உறுதிப்பாட்டு நிதியத்தின் பொழிப்பாக்கப்பட்ட நிதி நிலைமைக்கூற்று வெளியிடப்பட வேண்டிய போதிலும், அவ்வாறு இடம்பெற்றிருக்கவில்லை. | நான் ஒப்புக்கொள்கிறேன். அமைச்சின் 2019 ஆண்டு அறிக்கையில் ஒரு பொழிப்பு பந்தி சேர்க்கப்பட்டுள்ளது. 2021 ஆம் ஆண்டிற்கான இது தொடர்பான அறிக்கையைச் சேர்க்க நான் குறித்து வைத்துக்கொள்கின்றேன். | அமைச்சரவையின் முடிவுகளின்படி செயல்பட வேண்டும். |